பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4

*04 09 2025 THURSDAY* *6.30 PM*

## மாநிலச் செய்திகள்
## தலைப்புச் செய்திகள்

- வங்கி சேவைகளை இல்லங்களுக்கே சென்று வழங்கும் மிகப்பெரிய கட்டமைப்பை அஞ்சலக வங்கி சேவை கொண்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

- சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்த நடவடிக்கைகளின் பலன்கள் மக்களிடம் சென்றடைவதை தொழில்துறையினர் உறுதி செய்ய வேண்டும் என்று மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

- ஊட்டச்சத்து குறைபாட்டை களைய பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது.

- தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த நான்கு தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

- உலக *Wushu* சாம்பியன் போட்டியில் இந்தியாவின் *Sagar Dahiya* காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

-- இனி விரிவான செய்திகள்

<<<<<<<>>>>>>>

வங்கி சேவைகளை இல்லங்களுக்கே சென்று வழங்கும் மிகப்பெரிய கட்டமைப்பை அஞ்சலக வங்கி சேவை கொண்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், மத்திய அரசு மேற்கொண்ட சீர்திருத்த நடவடிக்கைகளே இதற்கு காரணம் என்று குறிப்பிட்டுள்ளார்.

அஞ்சலக வங்கி சேவை தொடர்பாக மத்திய அமைச்சர் திரு ஜோதிர் ஆதித்ய சிந்தியா எழுதியுள்ள கட்டுரையையும் பிரதமர் பகிர்ந்துள்ளார்.

<<<<<<<>>>>>>>

சரக்கு மற்றும் சேவை வரி விகிதங்களை குறைப்பதற்கான பரிந்துரைகளுக்கு அதற்கான குழுமம் ஒப்புதல் அளித்துள்ளதற்கு பல்வேறு தரப்பினர் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

மத்திய அரசின் இந்த சீர்திருத்த நடவடிக்கை காரணமாக அனைத்துத்தரப்பினரும் பயன்பெறுவார்கள் என்று தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தொழில்துறையின் வளர்ச்சிக்கு இது மேலும் உத்வேகம் அளிக்கும் என்றார்.

வரி விகித குறைப்பின் பலன்கள் அனைத்துத்தரப்பினரையும் சென்றடைவதை தொழில்துறையினர் உறுதி செய்ய வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

சரக்கு மற்றும் சேவை வரி குழுமத்தின் முடிவுகள் வரலாற்று சிறப்புமிக்கது என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதுதொடர்பாக அவர் விடுத்துள்ள செய்தியில், இதற்காக பிரதமர் திரு நரேந்திர மோடிக்கும், நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமனுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்வதாக குறிப்பிட்டுள்ளார்.

இதுவரை எந்த அரசும் வழங்காத மக்களுக்கான தீபாவளி பரிசுதான் இந்த சீர்திருத்த நடவடிக்கைகள் என்று பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த சீர்திருத்த நடவடிக்கைகள் மூலம் விவசாயிகள், நடுத்தர குடும்பங்கள், மகளிர் உட்பட அனைத்துத்தரப்பினரின் வாழ்வாதாரமும் மேம்படும் என்று குறிப்பிட்டுள்ளார்.

மக்களின் செலவுத் திறனையும், சேமிப்புத் திறனையும் ஊக்குவிப்பதற்கான முயற்சி இது என்றும் திரு நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்த நடவடிக்கைகளுக்கு தொழில்துறை பிரதிநிதிகளும் பெரும் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

தொழில் வளர்ச்சிக்கு இது ஊக்கம் அளிக்கும் என்று அவர்கள் கூறியுள்ளனர்.

இதன்மூலம், பணவீக்கம் மேலும் குறை வாய்ப்புள்ளதாக பொருளாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

மத்திய அரசு மேற்கொண்ட சீர்திருத்த நடவடிக்கைகள் மூலம் சரக்கு மற்றும் சேவை வரி தற்போது 2 விகிதங்களை மட்டுமே கொண்டுள்ளதாக சேலத்தை சேர்ந்த கணக்கு தணிக்கையாளர் திரு ஆதித்யா ரவிசங்கர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

*(Voice Byte – ஆதித்யா ரவிசங்கர் - 32 Sec. )*

மாணவர்கள் அதிகம் பயன்படுத்தும் *Stationery* பொருட்களுக்கு வரி விலக்கு அளித்திருப்பது வரவேற்கத்ததக்து என்று தருமபுரியை சேர்ந்த திரு வெங்கடேஷ் பாபு எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

*(Voice Byte –வெங்கடேஷ் பாபு- 30 Sec. )*

<<<<<<<>>>>>>

விவசாயிகள் மற்றும் நுகர்வோர் நலன்களை பாதுகாப்பதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக உணவுத்துறை அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் குறைந்த விலை வெங்காய விற்பனை வாகனத்தின் சேவையை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

இந்த வாகனங்கள் மூலம் ஒரு கிலோ வெங்காயம் 24 ரூபாய் என்ற மானிய விலையில் விற்கப்படுவதாக அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

தேசிய அளவில் சிறந்த கல்வி நிறுவனங்களுக்கான பட்டியலில் சென்னை ஐ ஐ டி தொடர்ந்து முதலிடம் பெற்று வருவது மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்று அதன் இயக்குனர் திரு காமகோடி கூறியுள்ளார்

எமது செய்தியாளிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(Voice Byte – காமகோடி – 37 Sec. )*

<<<<<<<>>>>>>

உணவு பாதுகாப்பு என்ற நிலையிலிருந்து ஊட்டச்சத்து பாதுகாப்பு என்ற நிலைக்கு நாம் முன்னேறியுள்ளதாக மக்கள் நல்வாழ்வுத்துறை முதன்மைச் செயலர் டாக்டர் செந்தில் குமார் கூறியுள்ளார்.

இன்று சென்னையில் நடைபெற்ற ஊட்டச்சத்து அணுகுமுறையை மேம்படுத்துவது குறித்த விளக்க நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

*(Sound Byte – செந்தில் குமார் – 45 Sec.)*

இந்த நிகழ்ச்சியில் பேசிய ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டு சேவை அமைப்பின் இணை இயக்குனர் திருமதி மலர்விழி, இரும்பு பாத்திரங்களில் சமைக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

<<<<<<<>>>>>>

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த நான்கு தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(Sound Byte – செந்தாமரை கண்ணன் – 51 Sec. )*

<<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் பணியின்போது உயிரிழந்த அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகளை மாநில அமைச்சர் திரு எ வ வேலு இன்று வழங்கினார்.

---------------------

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் நடைபெற்றுவரும் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை மாநில அமைச்சர் திரு மா. சுப்பிரமணியன் இன்று ஆய்வு செய்தார்.

------------

திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோவில் மாட வீதிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் சிமெண்ட் சாலை அமைக்கும் பணிகளை ஆட்சியர் திரு தர்பகராஜ் இன்று ஆய்வு செய்தார்.

---------------

அரியலூரில் நூற்றாண்டு பழமைவாய்ந்த மகா மாரியம்மன் கோவில் கும்பாபிஷேகம் இன்று வெகு விமரிசையாக நடைபெற்றது.

<<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலக Wiushu சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Sagar Dahiya காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

பிரேசிலில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் 56 கிலோ எடைப்பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர் வெற்றிபெற்றார்.

---------------

ஆசிய கோப்பை ஹாக்கிப்போட்டியில் இந்தியா இன்று மலேசியாவை எதிர்கொள்கிறது.

பீகாரின் Rajgir -ல் நடைபெறவுள்ள இப்போட்டி, இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

----------------

உலகக்கோப்பை குத்துச்சண்டை போட்டி இங்கிலாந்தின் Liverpool -ல் இன்று தொடங்கியது.

----------------

CAFA கோப்பை கால்பந்து போட்டியில் இந்தியா -ஆப்கானிஸ்தான் இடையேயான ஆட்டம் தற்போது தஜிகிஸ்தானின் Hasor-ல் நடைபெற்று வருகிறது.

----------------

உலக தடகள சாம்பியன் போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணியின் முதலாவது குழு டோக்கியோ சென்றடைந்தது.

<<<<<<<END>>>>>>